

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 353

சனிக்கிழமை
15 நவம்பர் 2025

ஐப்பசி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# பிரபாகரனின் போர் உத்திகளை உலக நாடுகள் கற்பிக்கின்றன!

## தோற்கடிக்க முடியாதவர் என்றும் தொல்.திருமாவளவன் புகழாரம்

**யாழ்ப்பாணம், நவம்பர் 15**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போர் உத்திகளை உலக நாடுகள் தமது இராணுவக் கல்லூரிகளில் கற்பிக்கின்றன. அந்தளவுக்கு அவர் இராணுவ ஞானம் உள்ளவராகவும், தோற்கடிக்க முடியாத தலைவராகவும் விளங்கினார் - இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.**

☞ 11

## தேர்தல் ஆணையாளராக ரசிக பீரிஸ் பொறுப்பேற்பு



கொழும்பு, நவ. 15
இலங்கைத் தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக ரசிக பீரிஸ் நேற்றுமுதல் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
தேர்தல் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிய சமன் ஸ்ரீ ரத்நாயக்க

☞ 10

## தமிழரசுக் கட்சிக்கான ஆணை சமஷ்டியை பெறுவதற்காகவே!

*சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு*



கொழும்பு, நவ. 15
புதிய அரசியலமைப்பின் ஊடாக அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்காகவும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெறுவதற்குமே இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தமிழர்கள் ஆணை வழங்கியுள்ளனர் என்று

☞ 11

## அநுரவை அடுத்தவாரம் சந்திக்கின்றது தமிழரசு!

யாழ்ப்பாணம், நவ. 15
ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு அடுத்தவாரம் இடம்பெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நேற்று நடை

☞ 11

## அரசாங்கத்தை எதிர்க்க அச்சப்படுகிறது எதிரணி

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



கொழும்பு, நவ. 15
அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு அச்சப்பட வேண்டிய நிலைமை எதிரணிக்கு ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று

☞ 11

காலாவதி உணவுப்பொருள்கள்

## உணவகங்களுக்கு 90,000 ரூபா தண்டம்!

*பருத்தித்துறையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், நவ. 15
காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பருத்தித்துறையைச் சேர்ந்த இரு வியாபார நிலையங்களுக்கு 90 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்

☞ 11



கிளிநொச்சி

## பேருந்துத் தரிப்பிடத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, நவ. 15
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தட்டுவன் கொட்டி பகுதியில் உள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து 35 வயது மதிக்கத்தக்க

☞ 09

*வல்வெட்டித்துறையில்*

## போதைக் குவியலுடன் 6 பேர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், நவ. 15
வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பல்வேறு போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆறு

☞ 11



**முச்சந்தி முரளி**

'இப்ப இப்பிடிப் புளுகிற திருமா முள்ளிவாய்க்கால் சண்டை நடக்கேக்க ஏன் போனை ஓஃப் பண்ணிட்டு இருந்தவராம்?'

*பட்ஜெட் மீதான*

## இரண்டாவது வாசிப்பு நேற்று நிறைவேற்றம்!

தமிழரசுக் கட்சி நடுநிலை

கொழும்பு, நவ. 15
2026ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் நேற்று 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்புக்கு ஆதரவாக 160 வாக்குகளும், எதிராக 42

☞ 11

## மரக்கறிச் சந்தையை இடமாற்றினால் உயிர் மாய்க்கவும் தயங்கமாட்டோம்!

பருத்தித்துறை வியாபாரிகள் கடும் மிரட்டல்
மண்ணெண்ணெயுடன் வியாபார நடவடிக்கை



யாழ்ப்பாணம், நவ. 15
பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத்தின் மேற்தளத்தில் இயங்கிவரும் மரக்கறிச் சந்தையை, மீண்டும் அங்கிருந்து இடமாற்றம் செய்ய முற்பட்டால் தீக்குளித்து உயிர்மாய்ப்போம் என்று பருத்தித்துறை மரக்கறிச் சந்தை

☞ 11

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4255 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 14 33 65 75 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹனை ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1322 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 23 50 52 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0281 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 2 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2361 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 17 31 38 68 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6013 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 1 0 1 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2043 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 19 21 59 69 |
| விசேட எழுத்து | Q |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0129 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 42 50 |

# வடக்குத் தாதிய உத்தியோகத்தர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

**வடக்கு மாகாண தாதியர் உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளோம். முரண்பாடற்ற தீர்வு வழங்கப்படும் என்று சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றதில் நேற்றுமுன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கில் நடத்தப்பட்ட அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் என்னுடன் கலந்துரையாடினர். தாதியர் உத்தியோகத்தர்களின் வரவுப் பதிவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அது தொடர்பில் மாகாண செயலாளர் மற்றும் ஆளுநர் அடங்கலாக மாகாண பிரதானிகளுக்கும், மாகாண சுகாதார பணிப்பாளருக்கும் இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அந்த கலந்துரையாடலுக்கமைய இணக்கப்பாட்டுக்கு வரமுடியும். மருத்துவமனைப் பணியாளர்களின் வருகை தொடர்பில் கணக்காய்வொன்று நடத்தப்பட்டது.

அந்த ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை | 0721 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 0 7 6 6 9 1 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2987 | F | 34 44 59 72 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 04 36 64 75 | 5148 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0817 | 02 10 18 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 17.11.2025 | வெள்ளிக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 08 18 35 58 | 4699 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 24 | 11 52 63 69 | 2163 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.11.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 16 17 27 36 | 2813 |

# நுகேகொட பேரணியை புறக்கணித்த பந்துல

கொழும்பு, நவ.15

நுகேகொடவில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் பங்கேற்கப்போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய மக்கள் சக்தியினர் நாட்டைமீட்கமுடியும்எனநம்புகின்றனர். அரசாங்கம் சிறப்பாகப்பயணிப்பதற்குரியசட்டங்களைஎமது ஆட்சியில் இயற்றி கொடுத்துள்ளோம். அந்த வழியில் தற்போது பயணிப்பதால் பிரச்சினை இல்லை.

2028 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த அரசாங்கத்தால் செயற்பட முடியாவிட்டால், அதைவிடவும் சிறப்பான திட்டத்தை முன்வைக்கும் தரப்புக்கு ஆதரவளிக்கக்கூடும். அதை நோக்கியே எதிரணியின் பயணம் அமையவேண்டும் - என்றார். (எ-44)

# தமிழ் மக்களுக்கான நீதி: ஐ.ம.சக்தி உறுதிசெய்யும்!

கொழும்பு, நவ.15

வடக்கு மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக உள்ளது என்று அந்தக் கட்சியின் பேச்சாளரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு அரசாங்கம் 200 ரூபா வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு இல்லை. அதனை நாம் ஆதரிக்கின்றோம். அதேபோல வடக்கு மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி அவசியம் என்ற நிலைப்பாட்டிலும் எமது கட்சி உறுதியாகவுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பேரன் வரவு - செலவுத்திட்டத்தை முன்வைப்பது போலவே இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# நல்லூர்ப் பிரதேசசபை வீதிகளில் பாதீனியச் செடிகள் அகற்றல்

யாழ்ப்பாணம்,நவ.15

நல்லூர்ப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளில் பரவியுள்ள, பாதீனியச் செடிகளை வேரோடு அகற்றும் பணிகள் நல்லூர்ப் பிரதேசசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காகப் பிரத்தியேக அணி உருவாக்கப்பட்டு அவர்கள் வீதியோரங்களில் காணப்படுகின்ற பாதீனியச் செடிகளை உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி அகற்றிவருகின்றனர்.

எனவே நல்லூர்ப் பிரதேசசபையின் எல்லைக்குள் வாழ்கின்ற பொது மக்கள் தங்கள் குடியிருப்பு வளாகங்களில் காணப்படும் பாதீனியச் செடிகளை உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி அழிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.



பாதீனியச் செடிகளை அகற்ற வேண்டுமெனில் அதுதொடர்பில் நல்லூர்ப் பிரதேசசபையுடன் தொடர்புகொண்டால் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்துள்ளார். (க-66)

# சிறைச்சாலைகளில் அதிகரிக்கும் இறப்புகள்

கொழும்பு, நவ.15

கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை வழிமுறைகள் இல்லாத காரணமாக சிறைச்சாலை இறப்புகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவால் வெளியிடப்பட்ட 'இலங்கையில் கைதிகளின் நிலைமை' 2025 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை இலங்கைச் சிறைகளில் குறைந்தது 168 கைதிகள் உயிரிழந்துள்ளனர். இதில், 155 பேர் நோய்களாலும், ஒன்பது பேர் உயிர்மாய்ப்புகளாலும் இரண்டு பேர் சிறைச்சாலைத் தாக்குதல்களாலும், இரண்டு பேர் சிறைச்சாலைகளில் விபத்துகளாலும் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு மார்ச் முதல் மே வரையிலான இரண்டு மாத காலத்தில் ஐந்து சிறைச்சாலை மரணங்கள் பதிவாகியுள்ளன.

சிறைச்சாலைகளில் பராமரிப்பு வசதிகளில் கடுமையான பலவீனம், புறக்கணிக்கப்பட்ட மருத்துவ நிலைமைகள் மற்றும் போதுமான மருத்துவத் தலையீடு இல்லாததால் பெரும்பாலான இறப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரற்று கட்டுமானத்துறை



கொழும்பு, நவ.15

**தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கையின் கட்டுமானத்துறையின் பங்களிப்பு கணிசமாகக் குறைந்துள்ளது என்று இலங்கை கட்டுமானச் சங்கத் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.**

முன்பு ஒன்பது வீதமாக இருந்த பங்களிப்பு தற்போது 3.5 வீதம் முதல் 6 வீதம் வரை குறைந்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் தங்கள் கட்டுமான வாய்ப்புகளில் பெரும்பாலானவற்றை இழந்துவிட்டனர். 40 வீதத்துக்கும் அதிகமான தொழிற்றுறை கட்டுமானத் தொழில் மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்யப்படவில்லை.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கட்டுமானத்துறை கவனிக்கப்படவில்லை. சிறு மற்றும் நடுத்தரத் தொழிலாளர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் கட்டுமானத்துறைக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அதில் 47 வீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக தொழிற்றுறையில் தேக்கம் மற்றும் சரிவு ஏற்பட்டது. கடந்த ஆண்டு கட்டுமானத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 53 வீதத்தை அரசாங்கம் வேண்டுமென்றே பயன்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இலங்கையர் கொலை

இஸ்ரேலில் வேலைவாய்ப்புக்காகச் சென்ற இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். 2 மாதங்களுக்கு முன்னர் நிர்மாணத்துறை வேலைக்காக இஸ்ரேலுக்குச் சென்ற 38 வயது இலங்கையரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலில் வசிக்கும் ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ஒருவரால் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (ச-இ)

## போதைமாத்திரைகளுடன் நால்வர் வவுனியாவில் கைது

வவுனியா, நவ.15

போதைமாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய வவுனியாவின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது. அவர்களிடம் இருந்து 150 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞரிடம் இருந்து 80 போதைமாத்திரைகளும், அதேபகுதியைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞரிடமிருந்து 30 போதைமாத்திரைகளும் அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதைமாத்திரைகளும், லக்சபானா வீதி, கத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நால்வரையும் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-நி)

## மரண அறிவித்தல்

மலர்வு 13 . 05 . 1996



உதிர்வு 13 . 11 . 2025

**குகநேசன் சர்மா (குட்டித்தம்பி)**

வரதமூர்த்தி குருக்கள் - காமாட்சி அம்மா, பால குமாரசாமி குருக்கள் - சத்திய பாமா ஆகியோரின் மூத்த பேரனும், சிவரூபக்குருக்கள் - ஜெயலட்சுமி தம்பதியரின் அன்புக்குரிய மூத்த புதல்வன் குகநேசன் சர்மா (குட்டித்தம்பி) அவர்கள் கடந்த (13.11.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் நாளை (16.11.2025) ஞாயிற்றுக்கிழமை புத்தூர் மேற்கு சிவன் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக பிற்பகல் 04.00 மணியளவில் கிந்து சிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சிவரூபக்குருக்கள்,
ஜெயலட்சுமி.

தாய், தந்தை, சகோதர சகோதரிகள்.
077 919 0605, 077 667 0605




## அப்பம் பங்கிட்ட கதை

ஊர் ரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் எண்டு சொல்லுவினம். ஆனால் இஞ்ச ரண்டுபட்டால்கூடப் பரவாயில்லை, மூண்டுபட்டுக் கிடந்துகொண்டு, நல்லூரில மாவீரர் நாளை ஆர் செய்யிறதெண்ட பிக்கல் பிடுங்கலில நிக்கினம். ஒரேகட்சியில இருந்து பிரிஞ்சதாலையோ என்னவோ மானில நிக்கிற மணிதரப்பும் , சைக்கிள் கட்சியும் எப்பவுமே நீரும் நெருப்பும் மாதிரித்தான். எல்லாத்திலும் ஏட்டிக்குப் போட்டிதான். என்னதான் ஆயிரத்தெட்டு சாட்டுகள் சொல்லி நீட்டி முழக்கினாலும், இந்த விஷயத்தில வலியப் போய் மணிதரப்புக்கு குடைச்சல் குடுக்கிறதென்னவோ சைக்கிள் கட்சிதான்.

நல்லூரில திலீபன்ர நினைவேந்தலில தொடங்கின இந்த "நினைவேந்தல் செய்யிறது நீயோ? நானோ?" எண்ட ஈகோ பிரச்சினை இப்ப மாவீரர் நாளில வந்து நிக்கிது. ஏற்கனவே திலீபன்ர நினைவுநாள் பிரச்சினையை பட்சி சொன்னதால , இப்ப மாவீரர்நாள் பிரச்சினையை மட்டும் பாப்பம். நல்லூரில தியாகி திலீபன்ர தூபிக்கு எதிர உள்ள காணியில நாலைஞ்சு வருசமா மணி+ பார்த்தீபன் கூட்டணிதான் மாவீரர்நாள் நினைவு மண்டபம் அமைச்சு, அதுக்க கல்வெட்டில மாவீரர்களின்ர பெயர், படங்கள் எல்லாம் வைச்சு நினைவேந்திக்கொண்டு வருகினம். அவையளும் ஏதும் ஒரு மாவீரர் துயிமில்லத்தில போய் விளக்குக் கொளுத்தி, நினைவேந்தல் செய்யத்தான் முதலில வெளிக்கிட்டவை. ஆனால் இஞ்ச யாழ்ப்பாணத்தில எல்லா மாவீரர் துயிலுமில்லங்களையும் சைக்கிள் கட்சிதான் குத்தகைக்கு எடுத்ததுபோல, தங்கட கட்டுப்பாட்டுக்க வைச்சு, மாவீரர் நாளைச் செய்யுது. அப்ப எந்தவொரு துயிலுமில்லத்திலையும் தாங்கள் நினைவேந்தல் செய்யேலாது எண்டதால,நல்லூரில இப்பிடியொரு மாவீரர் நினைவு மண்டபத்தைச் செய்து மணி+ பார்த்தீபன் கூட்டணி நினைவேந்தினது. நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை இந்த மாவீரர் நினைவு மண்டபத்துக்குப் போய், வீரச்சாவடைஞ்ச தங்கடை உறவுகளின்ர பேரயும், படத்தையும் பார்த்து நினைவேந்தின சனம் எக்கச்சக்கம்.

மாவீரர் துயிலுமில்லத்தில நினைவேந்தல் செய்யிறதை விட, இந்த மாவீரர் மண்டபத்தால மணி+ பார்த்தீபன் கூட்டணி, ஸ்கோர் பண்ணுறதைப் பார்த்ததும் சைக்கிள் கட்சிக்கு வயித்தெரிச்சல் தாங்கமுடியேலை. "எரியுதடி மாலா" எண்டு கத்தாத குறையா, இந்தப் புகைச்சலோட இருந்த சைக்கிள் கட்சி எப்பிடியும் இந்த இடத்தை தாங்கள் பிடிச்சு, அதில மாவீரர் மண்டபத்தை அமைச்சு, மணி+ பார்த்தீபன் கூட்டணி சனத்திட்ட நல்லபேரெடுக்க விடாமல் பாக்கோணும் எண்டு முடிவெடுத்திட்டினம். அதால போன வருசமே இந்தக் காணித்துண்டில மாவீரர் மண்டபம் அமைக்க அனுமதி கேட்டு, காசும் கட்டிட்டினம். அதேமாதிரி அந்தக் காணியில தாங்கள் முந்தின வருசம் மாதிரி மாவீரர் மண்டபம் கட்ட அனுமதி தரோணும் எண்டு , மணி+ பார்த்தீபன் கூட்டணியும் அனுமதி கேட்டிருக்கு. இந்தமுறை திலீபன்ர நினைவு நாளண்டு அங்க வந்த சனத்தைப் பார்த்திட்டு "எங்கட கட்டுப்பாட்டுக்க இருக்கிற தூபியில என்னெண்டு சைக்கிள் கட்சி நினைவேந்தல் செய்யலாம். இனிமேல் நாங்கள் செய்வம்" எண்டு பக்கத்தில நிக்கிறவையைக் கவனிக்காமல் வார்த்தையை விட்டிட்டார் யாழ்.மாநகர மேயர். இப்ப மணி+ பார்த்தீபன் கூட்டணியும், சைக்கிள் கட்சியும் ஒரே இடத்துக்கு அடிபடுறதால இதுதான் சந்தர்ப்பம் எண்டு மூண்டாவது தரப்பா களத்தில மேயரும் குதிச்சிட்டா. ஒரு அப்பத்துக்காக ரண்டு பூனைக்குட்டியள் அடிபட்டு, அதை சரியாப் பங்கிட்டுத் தரச்சொல்லி குரங்கிட்ட போனால் என்ன நடக்குமோ, அப்பிடித்தான் இஞ்சையும், மானும் சைக்கிளும் நினைவேந்தலுக்காக ஒரு காணித்துண்டுக்கு அடிபட அதை வைச்சு, நினைவேந்தல் செய்யிற பொறுப்பைத் தங்கட கட்சிக்குக் கீழ கொண்டுவர மேயர் கடுமையா 'ட்ரை' பண்ணுறாராம். இந்த விசயத்தில ரண்டு தரப்பும் ஆளையாள் விட்டுக்குடுத்துப் போனால் தான், மாவீரர் நாளின்ர புனிதம்கெடாமல் பாதுகாக்கலாம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். பிள்ளைகள் மூலம் வீண்பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக் கூடும். வெளியில் இருந்து உணவு வரவழைத்து சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வாகனத்தில் செல்லும் போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சிதரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண்விவாதத்தில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச்செல்வது நல்லது.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாகமுடியும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். அவர்களுடன் மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சற்றுப் பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத் துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.



# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ.15

சாவகச்சேரி நகராட்சிமன்றின் முன்னாள் நகரபிதா அமரர் இ.தேவசகாயம்பிள்ளையின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அமரரின் குடும்பத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். இதன்போது அமரரின் நினைவுப்பகிர் வினை சமகாலத்தில் உறுப்பினராக இருந்த தற்போதைய உப தவிசாளர் ஞா.கிஷோர், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சயந்தன் ஆகியோர் ஆற்றினார்கள். (ச-41-27,28)


## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

இச் சேவையூடாக அனைத்து சமூகத்துக்கும் சகல தொழில் துறை மணமக்களுக்கும் முக்கியமாக இலங்கையில் இருந்து வெளிநாடு சென்று திருமணம் செய்ய விரும்பும் மணமகன்கள், மணமகள்கள் எல்லோருக்கும் திருமணம் நிறைவேற்றி தரப்படும்.

தொடர்பு: வி. ஜெயந்தி 077 973 3183


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேரூந்துகள், குளிரூட்டப்பட்ட பேரூந்துகள், வான்கள் மற்றும் முச்சக்கர வண்டி போன்றவை வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்**

**(Invitation for Bid) -2026**

தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள், அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் (வளாகம்) |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-14 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus (AC) | 26-30 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 1.4 | முச்சக்கரவண்டி / Three wheeler | 03 | 01 | கிளிநொச்சி |

1. விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை டிசம்பர் முதலாம் (01) ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. வாகன உற்பத்தி வருடம் 2012ம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர், மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால், மேற்பார்வை செய்யப்படும்.
5. பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது.
   - பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   - தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். அல்லது சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் வாகன பயன்பாடு தொடர்பான வெளிப்படுத்தல் விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   - குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய உடல் உள ஆரோக்கியமான சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.
7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள், மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல்வேண்டும். அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள், மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.
8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு வைப்புப்பணமாக (Bid security) ரூபா 15.000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 30.03.2026ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
9. விண்ணப்பங்கள் யாவும் பிரதான வளாகத்திற்கானவை தனியாகவும் கிளிநொச்சி வளாகத்திற்கானவை தனியாகவும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.
10. முழுமையான தமிழ் மொழியிலான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000. 00 நிதியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 97000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும், விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும். மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
12. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2025 - 2026" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 01.12.2025 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது நேரடியாகக் கையளித்தல் வேண்டும்.

❖ கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)

| | | |
|---|---|---|
| திகதி: 24.11.2025 | நேரம்: 2:30pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

❖ ஏலத் திறப்பு (Bid Opening)

| | | |
|---|---|---|
| திகதி: 01.12.2025 | நேரம்: 2:30pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் மற்றும் ஏலத் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளிக்கலாம்.

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 021 2226517, Fax:- 021 2226517 )

தலைவர், பெறுகைக்குழு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
15.11.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."

–சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)–


# பாலியல் கல்வி: காலத்தின் தேவை!

பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் விழிப்புணர்வுக் கல்வியை வழங்கும் 'செயற்பாட்டு நடவடிக்கைகளில்' இறங்கியிருக்கின்றது அரசாங்கம். வெறும் 'பேச்சுக் கல்வியாக' அல்லாமல் புத்தகக் கற்கைநெறியாக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன. சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு என்பவற்றின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் தரப்பினரை ஒரு குழுவாக ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாலியல் துஷ்பிரயோகங்களும், துர்நடத்தைகளும், கலாசாரச் சீரழிவுகளும் மலிந்த பூமியாக இலங்கை மாறிக்கொண்டிருக்கின்றது. வடக்கு-கிழக்கிலும்கூட இந்த இழி செயல்கள் இப்போது தாராளம் பெற்றிருக்கின்றன. சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பத்திரிகைச் செய்திகள் இடம் பெறாத நாளினைக் காண்பதே இப்போது குதிரைக்கொம்புதான். பதின்மத்தைத் தொடாத பாலகர்கள்கூட பாலியல் இச்சைக்கு இரையாக்கப்படும் பின்னணியில், இந்த விழிப்புணர்வுக்கல்வி காலத்தேவை யான ஒரு நடவடிக்கையே. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்தக் கல்வி என்றோ செயலுருப் பெற்றுவிட்டது. தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் பாலியல் விழிப்புணர்வுக் கல்வியில் அண்மைக் காலமாக முழு வீச்சில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில்தான் காலத்தின் தேவையை அறிந்து இலங்கையும் இவ் விடயத்தைச் சிரத்தையில் ஏற்றியிருக்கின்றது.

ஒரு குழந்தை அதன் ஐந்து வயது வரைக்கும், பெற்றோரினதும் உற்றோரினதும் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும்தான் கூடுதலான நேரங்களைச் செலவிடுகின்றது. பாடசாலைக்காகப் புறப்பட்ட பின்னர் மூன்றாம் தரப்பு நபர்களுடனான பழக்கத்தை உருவாக்க வேண்டிய கட்டாயம் அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. இதனால் பள்ளிப்பருவத்தின் ஆரம்ப நாள்களிலேயே அந்தக் குழந்தைக்கு நல்ல தொடுகை, தவறான தொடுகை தொடர்பில் முடியுமான தெளிவூட்டல்களை விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும். பேச்சுவழக்கில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும், பாடப்புத்தகமாக கற்றல் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும் இடையில் ஆகப் பெரும் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. இதில், இரண்டாம்நிலை நடவடிக்கைகள் மிக இலகுவாக மாணவர்களைச் சென்றடைய வல்லவை. இங்கு விடயமும் அதுதான்.

அரசாங்கத்தின் திட்டத்துக்கு சில எதிர்ப்புகள் இப்போதே கிளம்பியிருக்கின்றன. கல்வியறிவை கலாசாரச் சீரழிவாகப் பார்க்கும் அவலம் இங்குதான் இடம்பெறுகின்றது. எனவே, அத்தகைய எதிர்ப்புகளைக் காரணம்காட்டி, இந்த நல்ல திட்டத்தை பூர்வாங்க நடவடிக்கைகளுடன் அரசாங்கம் கைவிட்டு விடக்கூடாது. இது செயலுருப்பெற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை, இது அரசாங்கத்துக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ மட்டுமான பணியல்ல. பிள்ளைகளின் நடத்தைக்கோலங்களில் கூடுதலான அக்கறை கொண்டவர்களாக பெற்றோரும் இருக்கவேண்டும். வகுப்பறையில் பத்துடன் பதினொன்றாக ஒரு பிள்ளையை ஆசிரியர் கண்காணிப்பதற்கும், வீட்டில் அந்தப் பிள்ளை ஏக கண்காணிப்பில் இருப்பதற்கும் இடையே பெருமளவு வேறுபாடுகள் உள்ளன. இந்தப் பொறுப்புணர்வை பெற்றோரும் வரித்துக்கொள்ளவேண்டும். இவை எல்லாமும் சேர்ந்த கூட்டொருங்கிய செயற்பாடுதான் பிள்ளைச் செல்வங்களின் நாளைய வளமான எதிர்காலமும் இருப்புமாகும். ஆக, பாலியல் சுரண்டல்கள் மலிந்த இவ்வுலகில் அதிலிருந்து தப்பிப்பதற்கான கல்வி மிகவும் அவசியமே.




# பெரும்போக உரமானியம் விநியோகம் ஆரம்பம்!



**கொழும்பு, நவ.15**

**பெரும்போகத்துக்கான உரமானியத் திட்டத்தின்கீழ் நெல் பயிரிடும் விவசாயி ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா நிதி மானியமாக விநியோகிக்கப்பட்டுவருகின்றது என்று கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

இந்தப் பணிகள் கடந்த 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இந்த மானியம் இரண்டு தவணைகளாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு கமநல சேவை நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டவுடன் முதலாம் தவணையாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இரண்டாவது தவணையாக மீதி 10,000 ரூபா நெற்செய்கை வயலில் ஆரம்பிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் வழங்கப்படும்.

இதற்காக அரசாங்கத்தினால் 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உரமானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 211,974 விவசாயிகளுக்கு 1976 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு; மேலுமிருவர் கைது

கொழும்பு, நவ.15

கொழும்பு - கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைச் சம்பவத்துக்கு உதவியதாக ஒரு பெண் உட்பட இரண்டு சந்தேகநபர்கள் கொழும்பு மாவட்டக் குற்றப்பிரிவால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தப் பயன்படுத்திய காரின் ஓட்டுநரான ஆண் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை கைதுசெய்யப்பட்ட பெண், சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு தங்குமிடம் வழங்கியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## துஷிதவுக்கு பிடியாணை

கொழும்பு, நவ.15

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவவைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நாரஹேன்பிட்டிப் பகுதியில் தாம் பயணித்த வாகனம்மீது சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக்கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக துசித ஹல்லொலுவ பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்த போது, சந்தேகநபரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் நீதிவான் இந்தப் பிடியாணையைப் பிறப்பித்தார். (ச-இ)

## அஸ்வெசும விநியோகம்

கொழும்பு, நவ.15

நவம்பர் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. இதற்கமைய 1,415,738 குடும்பங்களுக்கான கொடுப்பனவு அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது. இதற்காக 11.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)




# புனித யாத்திரையாக ஐயப்ப யாத்திரை

கொழும்பு, நவ.15

ஐயப்ப யாத்திரை புனித யாத்திரையாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவின் ஆலோசனையின் பிரகாரம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பரிந்துரைக்கமைய அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. அதையடுத்து அதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் அவசரகாலக் குருதிக்கொடை முகாம்நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. (ச-66)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 07 . 1952



மறைவு 15 . 11 . 2019

**இராஜபொன்கலன் திரேசம்மா**

கண் முன்னே வாழ்ந்த காலம், கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம், எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து, நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல், இருப்பீர்கள்.

தொடர்புகளுக்கு: 075 523 3499

நினைவுகளுடன் குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வில்

**2 ஆம் ஆண்டு**

அன்னை மடியில் 23.08.1922




ஆண்டவன் அடியில் 15.11.2023

**அமரர் மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

(ஆனந்தா அச்சகம்)

**14 ஆம் ஆண்டு**

அன்னை மடியில் 25.09.1945



ஆண்டவன் அடியில் 16.11.2011

**அமரர் தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்**

(வரி மேற்பார்வையாளர் & முன்னாள் Shamrock நிர்வாகி)

உங்கள் நினைவுகள் நின்றாடுகின்றன...
உங்கள் எண்ணங்களில் நித்தமும் மூழ்கித் தவிக்கின்றோம்.
உங்கள் புன்சிரிப்பைத் தேடுகின்றோம்.
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மாறாது, மறையாது தந்தையரே...
உங்கள் ஆன்மா இளைப்பாற வேண்டுகின்றோம்.

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 30381) E

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

## நினைவஞ்சலி

**29ஆம் ஆண்டு**




அமரர் **ஏகாம்பரம் பாலையா**

(பிரதம லிகிதர் MOH அலுவலகம்)

திதி: சதுர்த்தி

மலர்வு 06.10.1938 உதிர்வு 30.09.1996

**25ஆம் ஆண்டு**



அமரர் **பாலையா கிருஷ்ணகுமாரி**

திதி: ஏகாதசி

மலர்வு 10.03.1943 உதிர்வு 23.10.2000

அன்பான அம்மாவும், தோழமையான அப்பாவும்
கிடைத்த செல்வங்கள் நாம்.
அன்பையும், அறிவையும் எமக்களித்து
சுற்றம் போற்ற வாழ்ந்த எம் குலதெய்வங்கள்
எமை விட்டு பல ஆண்டுகள் சென்றாலும்
வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க முடியாத
அழகிய பொக்கிஷம்
"அம்மா"
"அப்பா"
ஓம் சாந்தி !

No: 20, அரசடி லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/59857) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 05 . 1933



உதிர்வு 02 . 11 . 2025

**சரஸ்வதி சின்னத்தம்பி**

(ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி)

யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி சின்னத்தம்பி அவர்கள் கடந்த 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - நாமகள் வித்தியாலயம் - கொக்குவில்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், இரத்தினம்மா, வைத்திலிங்கம், செங்கமலம், ஞானாபரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பொன்னப்பா, துரைராசா, இராசையா, இராசரத்தினம், தில்லையம்பலம், பாலசுப்பரமணியம், முத்துப்பிள்ளை, மனோன்மணி, சோதி மற்றும் இரகுபதி, குணராஜா, கமலாம்பிகை, இரத்தினமணி, மகாலட்சுமி, அம்பிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சசிதேவி, சிறீதர், சிவதேவி, காலஞ்சென்ற சித்திராதேவி மற்றும் சசிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரகுலசிங்கம், மனோசீலன், மஞ்சுளா, கயனாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஷ் - சுயன்யா, தயாளன், தினேசன், சுதர்சன், டினோஜா, நிலோஷன், ஆர்த்திகா, டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (15.11.2025) பிற்பகல் 3 மணிமுதல் 5 மணிவரை உறவினர்களின் பார்வைக்காக 209 Kenton Rd, Kenton, Harrow, HA3 OHD U.K மண்டபத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (16.11.2025) பகல் 10 மணி முதல் 12 மணிவரை Holder Hill Rd, London, NWT INB, UK மண்டபத்தில் நடைபெற்று பிற்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: சிறீதர் (மகன்)**
**+447718987847**

(CR 30715) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவிலில் கழிவகற்றல் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,நவ.15

டெங்கு மற்றும் சிக்கன்குனியாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேடதிண்மக் கழிவகற்றல் செயற்றிட்டம் இணுவில் ஜே/191, ஜே/188 கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் நாளை ஞாயிற்றுக் கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் வலிகாமம் தெற்குப் பிரதேசசபை ஆகியன இணைந்து இந் தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதன்போது தேவையற்ற உக்காத பொருள்கள் (பிளாஸ்ரிக், போத்தல், ரயர், ரின் மற்றும் உக்காத நீர் தேங்கும் பொருள்கள்) போன்றவற்றை ஒரு பையில் இட்டு, அன்றைய தினம் பிரதேசங்களுக்கு வருகைதரும் பிரதேசசபையின் வாகனங்களிடம் நேரடியாகக் கையளிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (சு-66)



## சித்தராயர் வழிவந்த சித்த வைத்தியர் குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியரே!



டாக்டர் திருமதி தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம்




டாக்டர் திருமதி கந்தசாமி சிவக்கொழுந்து




டாக்டர் குணரத்தினம் செல்வதுரை (ஓய்வு பெற்ற அதிபர் பிலபல வைத்தியர்) 25 வது நினைவு தினம் 15.11.2000 - 15.11.2025



டாக்டர் திருமதி செல்வதுரை பொன்னம்மா (வைத்திய பூபதி, பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம் (வைத்தியர்)



டாக்டர் பூலோகசுந்தரம் கய்லநாதன் (D.A.M.S (CEY))



டாக்டர் செல்வதுரை வரதரத்தினம்



டாக்டர் செல்வதுரை இராசரத்தினம்



டாக்டர் குணரத்திம் சாங்கரப்பிள்ளை (பிரபல சித்த ஆயுள் வேத வைத்தியர்)



டாக்டர் சி.சுப்பையா (முறிவு, நெறிவு, நோ வைத்தியர்)

**மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் ஆயள்வேத வைத்தியர் கிருபாரத்தினம் ஆசிரியர் தினவிழாவில் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்தியும், பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்க்கு நகரப்புற பாடசாலைக்கு போகாமல் கிராமப்புற பாடசாலையில் கல்வியைத் தொடர வைக்கும்படி அன்பான வேண்டுகோளை முன்வைத்தார்.**

மதிப்புக்குரிய அதிபர் அவர்களே. பிரதிஅதிபர் அவர்களே மற்றும் இன்றைய விழாவை சிறப்பிக்க வந்த பிரதமவிருந்தினர் இலங்கை வங்கி முகாமையாளர் அவர்களே ஆசியுரை வழங்க வந்த சிவஸ்ரீ உமாசுதன் ஐயா அவர்களே. மாணவச் செல்வங்களே அனைவருக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலைச் செயலாளர் என்ற வகையில் ஒரு சில கருத்தைக் கூற விரும்புகிறேன்.

தல்வி தொடர்பாக ஆதிகாலத்தில் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாச நூல்களில் குரு சிசியன் முறையில் கல்வி புகுத்தப்பட்டது. அரச வம்சமாகச் சரி சாதாரண ஆட்காக சரி குருவிடம் தத்தமது பிள்ளைகளை கல்விக்காக குருமாரிடம் பாரம் மொடுத்து விடுவார்கள். உதாரணமாக அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணரும் குசேலரும் ஒன்றாக கல்விகற்றுள்ளார்கள். இதே போன்ற பாரதக் கதைகளில் பாண்டவர்கள் தத்தமது குருவுடனே கல்வியை கற்றுவந்தார்கள். இவ்விதம் கல்வி கற்று வந்த எமது சமுதாயம் பின்னர் நிண்ணைக் கல்வியில் கற்று உள்ளார்கள். இதன் பின் தற்போது பாடசாலை மூலம் பிள்ளைகள் கல்வியைக் கற்று வருகிறார்கள்.

ஒரு சமுதாயத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். அவ்விதம் எமது மயிலணி சைவ மகாவித்தியாலயம் அதிபர் பார்த்திபன் அவர்களின் வழிகாட்டலில் இங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களின் விடா முயற்சியாக எமது பிள்ளைகளுக்கும் கல்வியை மட்டுமில்லாமல் ஒழுக்கத்தையும் விளையாட்டுத் துறையிலும் மிகக் கன்னியமான முறையில் தமது கடமைகளை எவ்வித குறையும் இன்றி நிறைவுடன் செய்து வருகின்றனர்.

அதோடு மதிய நேரம் கொடுக்கப்படும் உணவு மிக தரமானதாக இருக்கிறது எனது மகனும் கல்வி கற்று வருகிறார். அவர் பாடசாலை முடிந்ததும் வீட்டிற்கு வந்து உணவு ஆருத்துவதில்லை பாடசாலை உணவு மிக தரமானதென அக மகிழ்கிறார் பிரத்தியேக வகுப்புக்குப் போக மறுக்கிறார். எனவே இப்பாடசாலை மகா தங்கிய அதிபர், ஆசிரியர்களின், தங்களின் கடமைகளை சீரும் சிறப்புமாகச் செய்து வருவதை இட்டு இப்பாடசாலைச் செயலாளர் என்ற முறையில் அக மகிழ்ச்சியடைகிறேன்.

மாணவ, மாணவிகள் இன்றைய விழாவை மிக சிறப்பாக செய்வதையிட்டு ஆசிரியர்களின் திறமைகளை மாணவர்கள் உணர்ந்துள்ளார்கள். போன வருடம் மத சிறிலங்கா போட்டியில் எனது மகன் உப்பட தேசிய ரீதியில் முதலாம் இடத்தை கொழும்பு நகரில் அலரிமாளிகையில் மாண்புமிகு பிரதமர் தினேஸ் குணவர்த்தன அவர்களிடம் பாடசாலைக்கு 30 இலட்சம் ரூபாய் காசோலையும் வழங்கி கிராமப்புற பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள். இவைகளுக்கு காரணம் ஆசிரியரின் முயற்சி ஆகும்.

மற்றும் **சாதனை மாணவன் பார்கவின்** எமது பாடசாலையின் ஒரு வருடத்தில் மூன்று தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொண்டு எமது பாடசாலைக்கு பெருமையைத் தந்து உள்ளார்.அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தை எமது பாடசாலைக்கு பெற்று எமது பாடசாலைக்கு பெருமையை சேர்த்து உள்ளார்.

சகல பெற்றோர்களுக்கும் நாம் வைத்தியர் என்ற ரீதியில் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எமது பிள்ளைகள் நகர்புற பாடசாலைக்குப் போகாமல் எனது கிராமப்புற பாடசாலையில் கல்வி கற்க ஆவண செய்யவும் பிள்ளைகள் அயல் கிராம பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் நல்ல ஓய்வு எடுப்பார்கள். பலவிதமான காய்ச்சல்கள் எங்களை அறியாமல் வருகின்றது. ஆகவே வீட்டுக்கும் அருகாமையில் உள்ள பாடசாலையில் கல்வியைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### வைத்தியக் குறிப்புக்கள்.

**எமக்கு உற்ற துணை யார்?**

எமக்கு உற்ற துணையாக இருப்பது யார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை. தாய். மனைவி. உறவினர்கள். கடவுள் என்ற நீண்ட வரிசையில் ஒருவர் சொல்லிவிடலாம் என்பவர் நினைப்பர். ஆனால் ஆன்மீக சிந்தனையில் எமது உடம்புதான் எமக்கு உற்றதுணையாக நவீன கருத்தாகும். எமது உடல் ஆரோக்கியம் சிறப்பாக வாழ்ந்தால் நாம் நீண்ட காலமாக உயிர் வாழ முடியும். இதனால் எமக்கு உற்றதுணை உடம்பாகும். உடம்பு உற்சாகமாகவும். மகிழ்ச்சியாகவும் இருந்தால் எமது உயிர் நீண்ட காலமாக உடம்பில் தங்கியிருக்கும்.

**வீட்டில் மூலிகைகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்.**

- எமது பாரம்பரிய, பாதுகாக்கப்பட்ட இனிய நறுமணத்துடன் கூடிய காற்றோட்டம் கிடைக்கும் வீட்டுச் சுழல் தெய்வீகத் தன்மை பெறும். விஷ ஜந்துக்கள் வீட்டில் அணுகாது.
- வீட்டுச் சூழலில் அழகாகக் காட்சியளிக்கும் மூலிகைத் தோட்டத்தில் உலாவி தோட்டத்தை ஒழுங்கமைத்தல் நல்ல பொழுதுபோக்காக அமையும் இதனால் மன அழுத்தங்கள் நீங்கி மகிழ்ச்சியும் ஏற்படும்.
- மூலிகைகளை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இனம் காணக்கூடியதாக அமைவதுடன் மூலிகைகளின் வளர்ச்சி பற்றிய கல்வி அறிவுவளர்ச்சிபெறும்.
- தினமும் வீதவிதமான. இயற்கையான. சுத்தமான (கிருமிநாசினிகள் அடிக்காத சமைத்து உண்ணக்கூடிய மூலிகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழலாம்.
- வீட்டிற்கு வருபவர்களுக்கும் கொடுத்து நல்லுறவை வளர்த்துக்கொள்ளலாம்.
- சாதாரண நோய்கள் ஏற்பட்டால் உடன் வீட்டு மூலிகைகளை பறித்து இதை மருத்துவம் செய்து குணமாக்கலாம்.
- இதனால் நோய்கள் உடன் குணமாகின்றது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகின்றது. நேரமும் பணமும் மீதியாகின்றது. (சில நோய்களுக்கு உடன் வைத்தியசாலைக்கு சென்று மருத்துவ ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும்) இடவசதிக்கு ஏற்றவாறு மூலிகைகளை வளர்த்து விற்று பணம் சேர்த்துக் கொள்ளலாம்.

**மூலிகைகளின் சிறப்புகள்**

- அறிவுக்கனியாகும் வாழைக்கனி மிக இலதவாகவும் மலிவாகவும் கிடைக்கும். வாழைப்பழம் நம் உடலுக்கு நல்ல போசணையைத் தரும். அதனால் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது.
- **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்"**
  அதிக விருப்பமான உணவு என்றாலும் சுகமாக்கும் மருந்து என்றாலும் விரும்பிய செயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப் போனால் அது அமிர்தமாக இருக்காது. நஞ்சாக மாறிவிடும்.
- **"வல்லாரை உண்டால் வல்லாரைவெல்லலாம்"**
  வல்லாரை ஞாபகசக்தியை அதிகரிப்பதுடன் உடற்பலத்தையும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.
- **"சுக்கைப் போல் மருந்தில்லை சுப்பிரமணியம் போல் தெய்வமில்லை"**
  கருணை வள்ளலான சுப்பிரமணியக் கடவுள் எம்மைக் காப்பது போல் மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வதுமில்லை. சுக்குத் தேநீர் குடிக்கவும்.
- **"பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்."**
  பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவது நச்சுத் தன்மையிருந்தாலும் பத்து.மிளகு விஷத்தைப் போக்கும். அதனால் எமது உணவிலும் மிளகு சேர்ப்பதனால் அதிலுள்ள நச்சினைப் போக்கும்.
- **"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"**
  ஆலமரப்பட்டையும் வேல் என்பது வேம்பு வெள் வேலமரம். அதன்பட்டையும் பற்களுக்கு பாதுகாப்பு.
- **"கறிவேப்பிலையோ - வேப்பிலைகாய்கறிக்கெல்லாம்ஸ தாய்ப்பிள்ளை"**
  காய்கறி எல்லாவற்றையும் சமைக்கும் போது நாம் கறிவேப்பிலை சேர்க்கிறோம்.
- **"பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே"**
  விலை கூடிய பொன்னை விட கீரை வகையானது மதிப்பு கூடுதலானது. அது உண்பதால் உடலுக்கு அதிக போசணையைத் தரும்.

**காய்ச்சல் தலைவலி மாசுபடுதல் வைரஸ் காய்ச்சல்களுக்கு குடிநீர் வகை**

- சுக்கு. கொத்தமல்லி. நற்சீரகம். கண்டங்கத்தரி. ஆடாதோடா மரமஞ்சள், பங்படகம். 1/3 ஆக காய்ச்சி காலை. மாலை குடிக்கவும்.
- கருங்காய் பேதி குடித்தால் இரத்தத்தில் உள்ள கிருமிகளை ரிதி கான்சர் போன்ற நோய்கள் எமது உடலிற்கு வராது.
- சுக்கு. மிளகு. திப்பிலி சம அளவு எடுத்து காலை மாலை அரைத் தேக்கரண்டி தேநீருடன் குடிக்கவும்.
- நெற்பொரி குடிநீர் குடிக்கவும்.

அன்பு உள்ளங்களே மேலேதரப்பட்ட இயற்கை வைத்தியத்தை படித்து வைத்தியசாலைக்குப் போகமல் இயற்கையில் வாழ்ந்து எமது சமுதாயத்தை உயர்த்த பெண்கள் (தாய்க்குலம்) கருத்தடை மாத்திரை பாவிக்காமல் இரத்தம், கட்டி போன்ற நோய்களிலிலிருந்து விடுபட்டு பல குழந்தைச் செல்வங்களை பெற்று மிக மிக சிறப்பாக வளர சுன்னாகம் தாழையடி ஜயனாரையும், சுழிபுரம் பறாளாய் பிள்ளையாரின் அருள் பெற்று இயற்கையில் வாழ வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை,
சுன்னாகம் NSB Bank வீதி, உடையார் வளவு
சுன்னாகம்.

செ.கிருபாரத்தினம். ஆயுள் வேத வைத்தியர்.
முன்னாள் இந்திய ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்.
[illegible] பொறுப்பாளர்.

077 954 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்
## முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்தல் - 2026

**வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நவீனதொழில்நுட்பத்துடன் கூடிய (Smart Preschool) பின்வரும் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- அரிச்சுவடி முன்பள்ளி - ஆவரங்கால்
- கஜமுகன் முன்பள்ளி - அச்சுவேலி
- சிகரம் முன்பள்ளி - இருபாலை

முன்பள்ளிகளில் கல்விகற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.

- தாய்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
- எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- தகைமை பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- இலவச சீருடை வழங்கப்படும்.
- இலவச சத்துணவுகள் வழங்கப்படும்
- இலவச கல்விச் சுற்றுலா வசதிகள்
- வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றது.
- அதிகப்படியான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் போது வருமானம் குறைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறித்த முன்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் முன்பள்ளிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
விண்ணப்பங்களை பூரணப்படுத்தி 15.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்பள்ளிகளிலோ அல்லது புத்தூர், அச்சுவேலி, கோப்பாய் உபஅலுவலகங்களிலோ அல்லது புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

1. தலைமை அலுவலகம் - 021 205 8867
2. புத்தூர் உப அலுவலகம் - 021 205 8988
3. அச்சுவேலி உப அலுவலகம் - 021 205 8972
4. கோப்பாய் உப அலுவலகம் - 021 205 8974

15.11.2025

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.

CR 46293 (5x20) A


# சங்கானைப் பிரதேச செயலகம் அதிகாரிகளால் திடீர் சோதனை

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையிலான மாவட்டச் செயலக அதிகாரிகள் குழுவினர், சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது பிரதேச செயலகத்தின் ஒவ்வொரு அலுவலகப் பிரிவுகளும் ஆய்வுசெய்யப்பட்டன. சில விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு, அவற்றை நிவர்த்திசெய்யு மாறு பணிக்கப் பட்டது.


அதேவேளை பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டம் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றியமைக்காக பிரதேச செயலரையும், உத்தியோகத்தர்களையும் பாராட்டினர். யாழ்.மாவட்ட மேலதிக செயலர் மாவட்ட மேலதிக செயலர் (காணி) , மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகப் பிரதம பொறியியலாளர், மாவட்டச் செயலகப் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் அடங்கிய குழுவினர் இந்தக் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டனர். (க-66)


## வீடு அறைகள் நாள் வாடகைக்கு
KANMANI GUEST HOUSE

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்துக்கு அருகாமையில் (இல - 36, பலாலிவீதி, கோண்டாவில்) விசாலமான 5 Rooms (A/C, Non A/C), 2 Halls, Kitchen, 4 Bathroom மற்றும் சகல தளபாடங்கள், வாகன தரிப்பிட வசதிகளுடன். முழுவீடாகவும் தனித்தனி அறைகளாகவும் நாள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 077 918 4553
077 490 9707 Whats App


# மரண அறிவித்தல்



## வீரகத்தி கயிலாயபதி (கிளி)

**(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம், வடமாகாண காணி நிர்வாகத் திணைக்களம்)**

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கையும், தற்போது **154/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை** வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கயிலாயபதி அவர்கள் கடந்த (12.11.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பவானியம்மா தம்பதியரின் மருமகனும், ஞானேந்திரியின் பாசமிகு கணவரும், சுதாகர் (Software Engineer - Meta, UK), யாழினி (Doctor) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்சீவன் (Doctor), ஜெயசுமங்கலா (Lecturer, UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் குஞ்சுத்தம்பி (Germany), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் தங்கராணி, கணேசமூர்த்தி (Germany), கலாவதி (Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாஸ்கரன் (ஓய்வுநிலை அதிபர்), வாகீசன் (ஓய்வுநிலை அதிபர்), தேவரஞ்சன் (France), நந்தபூபன் (QS, Australia), யோகேந்திரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(16.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 22.12.1952 — **மறைவு** 12.11.2025

154/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 954 3968 (மகன்)
077 213 2294 (மகள்)

(CS/59913) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 22.07.1952 இறப்பு 15.11.2019

## அமரர் திரேசம்மா இராஜபொன்கலன் (ராசாத்தி)

இறை நம்பிக்கையில் பற்றுறுதி கொண்டு
வாழ்வின் சவால்களை ஏற்றுமுன் நடக்க
அன்னையே நீங்கள் கற்றுத் தந்த
பாடங்களும் செய்த அன்புத் தியாகங்களும்
என்றும் எம் நினைவில் சங்கமம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

08, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
078 911 7030

CS 30386 J A

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி ராஜமணி தேவபாலசுந்தரம் (மணி டீச்சர்)

(ஓய்வுநிலை அதிபர் யாழ் / கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி கூட்டுப்பிரார்த்தனை இன்று சனிக்கிழமை 15.11.2025 மதியம் 12:00 மணியளவில் பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியிலுள்ள AVS மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தேவநேசன் குடும்பம் - 0717809664

## பேருந்துத்...

பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் யார் என உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் அவர், தட்டுவன்கொட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் அல்லர் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு மேலதிகமாக, கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-28-113)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 . 01 . 1947



விண்ணில் 27 . 09 . 2025

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

## காங்கேசு இளங்கோவன்

திதி : 15.11.2025

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பே உருவான எங்கள் குலவிளக்கே !
எம்மைக் கண்ணீரில் மிதக்கவிட்டு ஊரும், உறவும்
பேரும் துறந்து அவனியை விட்டு அதற்குள்
ஓராண்டு கழிந்து விட்டதே!
உங்கள் அன்பும், பாசமும் சேர்ந்து வாழ்ந்த
இனிய நாட்களும் நீங்காத நினைவுகளாக எம்மை
வாட்டி வதைக்கின்றதே.
இறைவன் போட்ட கணக்கை மாற்ற முடியாது
என்பதைத் தெளிந்து வெவ்வில் முருகன் சேவடியில்
சேர்ந்து இன்புற்றிருக்க எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அண்ணன் - கா.பாலகிருஷ்ணன் குடும்பம்

(CS/59833) J-1

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 01.12.2025 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ பீட உணவகம் | கைதடி |
| சேர்பொன்இராமநாதன் அவைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில். |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/=இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000268 இற்கும். மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா 500/=இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

15.11.2025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுமுன்தினத்துடன் தனது பதவியில் இருந்தும், அரச சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார். இதையடுத்தே, புதிய தேர்தல் ஆணையாளராக ரசிக பீரிஸ் பொறுப்பேற்றுள்ளார். (அ-ம)

# மாவீரர் நாள் நினைவேந்தல் மாநகர முதல்வர் கள ஆய்வு

யாழ்ப்பாணம், நவ.15
யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக அனைத்துக் கட்சிகளின் பங்குபற்றுதல்களுடன் மாவீரர்நாள் நினைவேந்தல்களை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆராய்ந்தார்.
நினைவேந்தல் மேற்கொள்ளப்படவுள்ள மாநகரசபையின் நல்லூர் விடுதிக்கு அருகாமையிலுள்ள இடத்தில் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் முதல்வர் கலந்துரையாடினார். கலந்துரையாடலில், இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25)




## Vembadi Old Girls' Association Jaffna (VOGA - Jaffna)

The Annual General Meeting of VOGA - Jaffna will be held as scheduled on

Date : 30th November 2025
Time : 09.00 am
Venue : Trimmer Hall
Vembadi Road, Jaffna

All members of VOGA - Jaffna and new members are WELCOME.

Secretary
VOGA - Jaffna


# கஞ்சா கலந்த மாவா கைதானார் இளைஞர்



யாழ்ப்பாணம், நவ. 15
யாழ்ப்பாணம் - கண்ணாபுரம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கஞ்சா கலந்த மாவா மற்றும் போதைமாத்திரைகள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோ 790 கிராம் எடையுள்ள மாவாவும், 50 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை - 2026

தலைவர், கொள்வனவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, பிரதான வளாகம் மற்றும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகங்களில் உள்ள வாகனங்களிற்கான வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகளுக்காக தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | வாகனங்களின் எண்ணிக்கை | வேண்டப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| UOJ/AD/MA-II/VS/J/2026 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை யாழ்ப்பாணம் | 16 | 15, 000. 00 | 30.03.2025 |
| UOJ/AD/MA-II/VS/K/2026 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை கிளிநொச்சி | 10 | 15, 000. 00 | 30.03.2025 |

விலைக்கேள்விதாரர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமானது

1. மேற்கண்ட அனைத்து சேவைகளையும் வழங்கும் வகையில் உரிய பதிவுகளை பெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் கேள்விப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. குறைந்தது மூன்று (03) வருடங்கள் அரச நிறுவனங்களுக்கு வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாகஇருத்தல் வேண்டும்.
4. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 3.000.00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் 970000060000276 வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடம் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக நாட்களில் 28.11.2025 வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 15.00 மணிவரை)
5. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூல/ பிரதி (Original/ Duplicate) ஆவணங்கள் என தனித் தனியே பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை –2026 " எனத் தலைப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக 01.12.2025 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

- கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)

| | | |
|---|---|---|
| திகதி: 24.11.2025 | நேரம்: 03:00 pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

- ஏலத் திறப்பு (Bid Opening)

| | | |
|---|---|---|
| திகதி: 01.12.2025 | நேரம்: 03:00 pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் மற்றும் ஏலத் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளிக்கலாம்.

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 021 2226517, Fax:- 021 2226517 )

தலைவர், பெறுகைக்குழு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
15.11.2025


# ஐவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய்!




கொழும்பு, நவ.15
நாட்டில் ஐந்து பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது நாட்டில் அதிகரித்துவரும் தொற்றா நோய் அதிகரிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அண்மைய தரவுகளின்படி, நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையில் 73 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. உலகளவில் ஒன்பது பெரியவர்களில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில், இந்தப் பாதிப்பு 23 சதவீதம் முதல் 30 சதவீதம்வரை இருக்கும்.
நீரிழிவு தொடர்பான குருட்டுத்தன்மை மற்றும் பார்வைக்குறைபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 923 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
ஆரம்பக் கட்டங்களில், வாழ்க்கைமுறை மாற்றங்கள், உணவுக்கட்டுப்பாடு மற்றும் வழக்கமான மருத்துவப் பரிசோதனைகள் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனின்...

நல்லூர் கிட்டுப்பூங்காவில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்ட வடமாகாண மர நடுகை மாத நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் இடையிலான நெருக்கம் ஆழமானது. பல்வேறு உரையாடல்களின் போது ஈழம் தொடர்பிலும், தான் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முரண்கள் தொடர்பிலும் அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார். 'ஈழம் மலரும் அப்போது உங்களை நான் அழைப்பேன். அதுவரை எளிய மக்களுக்காகத் தமிழகத்தில் போராடுங்கள்' என்று அவர் கூறிய வார்த்தைகள்தான் என்னை ஊக்கப்படுத்தின.

அண்ணன் பிரபாகரன் இராணுவக் கல்லூரியில் பயிலவில்லை, போர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளவில்லை, அரசியல் சித்தாந்தங்களை கற்கவில்லை. ஆனால், அனைத்து விடயங்களிலும் ஞானம் படைத்தவராக இருந்தார்.

ஈழ விடயத்தில் எதற்காக நோர்வே இவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின்றது? எதற்காக எரிக் சொல்ஹெய்ம் இவ்வளவு ஈடுபாடு காட்டுகின்றார்? என்ற கேள்விகள் என்னைத் துருத்திக் கொண்டிருந்தன. இந்த விடயத்தை நான் அண்ணனிடம் கேட்டபோது, 'அமெரிக்காவின் கோரமுகம் இஸ்ரேல், அமெரிக்காவின் அன்புமுகம் நோர்வே' என்று அப்போது அவர் என்னிடம் கூறினார். அந்த வார்த்தைகளின் வலிமையை பின்நாள்களில் என்னால் உணர முடிந்தது. நான் அமெரிக்காவைப் பற்றிக் கேட்கவில்லை. கேட்டது நோர்வே தொடர்பில் தான். ஆனால் அவர் வழங்கிய பதில், அண்ணன் பிரபாகரன் எவ்வளவு தொலைநோக்குப் பார்வையுள்ளவர் என்றும், எவ்வளவு தூரம் அவர் ஞானம்பெற்ற தலைவராக இருந்தார் என்பதையும் 2002ஆம் ஆண்டே உணர்த்தியது. இதுதான் அண்ணன் பிரபாகரன்.

மாவீரர் தினத்தில் பிரபாகரன் என்ன பேசப்போகின்றார் என்பதற்கான காத்திருப்பைக் கொண்டிராத உலக நாடுகளே இல்லை. சிங்கள தேசத்தை மட்டுமல்லாமல், இந்திய ஆட்சியாளர்களை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலக நாடுகளையும் தன்மீது கவனக்குவிவைச் செலுத்தவைக்கக்கூடிய பெரும் சக்தியாக பிரபாகரன் திகழ்ந்தார்.

இன்றைய தலைவர்கள் ஒரு நாளில் பத்து மேடைகளில் பேசுகின்றனர். வருடத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் பேசுகின்றனர். ஆனால், அண்ணன் பிரபாகரன் ஆண்டில் ஒருமுறை மட்டும்தான் பேசுவார். அந்த உரையை உலக நாடுகள் காத்துக்கிடந்து கவனிக்கும். அவரின் உரைகள் மிக நுட்பமானவை, ஆழமானவை, தொலைநோக்குப் பார்வையுள்ளவை. தனது உரைகளில் எந்தவொரு இடத்திலும் இந்திய அரசை ஈழத் தமிழர்களுக்கு எதிரான சக்தியாகப் பதிவுசெய்யவில்லை.

ஏனெனில், இந்தியா எம்முடைய நோக்கங்களை ஏற்றால்தான் எமது அபிலாஷைகள் நிறைவேறும் என்ற தெளிந்த அறிவு பிரபாகரனுக்கு இருந்தது - என்றார். (அ-ம-26)

## உணவகங்களுக்கு...

கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் கடந்தவாரம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே, காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரு உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்தே அவர்களுக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-100)

## தமிழரசுக்...

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய மக்களாணையைப் போன்றுதான் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அரசியல் அபிலாஷைகளை வெல்வதற்காகவும், சமஷ்டியை உறுதிப்படுத்தவுமே தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட்ட ஆணை அமைகின்றது. இது கார்த்திகை மாதம். வடக்கு, கிழக்கில் எமது விடுதலைக்காக போராடிய வீரமறவர்களை நினைவுகூரும் மாதம். ஆயிரக்கணக்கான போராளிகள் இனத்தின் விடுதலைக்காக இந்த மண்ணில் விதைக்கப்பட்டனர். அவர்களை நினைவுகூரும் மாதம்.

எனவே, பாலமொன்றை பெறுவதற்காக எமது ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்த்தியாகம் செய்யவில்லை. ஒரு பொறுப்புள்ள கட்சி என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி சிந்தித்து முடிவெடுக்க கூடிய உரிமை எமது கட்சிக்கு உள்ளது. தமிழ்மக்களின் உரிமைக்கானது எமது கட்சி. ஜனாதிபதி மீது எமக்கு இன்னும் நம்பிக்கை உள்ளது' - என்றார். (அ-ம-44)

## அநுரவை...

பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு தமிழரசுக் கட்சி வாய்ப்பொன்றைக் கோரியிருந்தது. இது தொடர்பில் கடிதங்களும் அனுப்பப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் தந்தையாருடைய மரணவீட்டுக்கு ஜனாதிபதி வந்திருந்தபோது இந்த விடயம் தொடர்பில் அவரிடம் நேரடியாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்போதே, தமிழரசுக் கட்சியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி அநுர தெரிவித்தார். பெரும்பாலும் எதிர்வரும் வாரமளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற வாய்ப்புள்ளது.

இனப்பிரச்சினை சார்ந்த விடயங்கள், மாகாணசபைத் தேர்தல், புதிய அரசியலமைப்பு, காணி விடுவிப்பு, பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்துள்ளோம்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரே தளத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் விரைவில் தமது நிலைப்பாட்டை அறிவிப்பதாக அவர்கள் கூறியிருக்கின்றனர். அவர்களின் நிலைப்பாடு தொடர்பில் தெரிவிக்கப்பட்டதும் அடுத்தகட்ட நடவடிக்கை இடம்பெறும். தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது தனித்துவத்தை இழக்காமல், அனைத்து விடயங்களிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இப்போது மிகவும் அவசியமானது - என்றார். (அ-ம-26)

## மரக்கறிச்...

வியாபாரிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். அத்துடன், மண்ணெண்ணெய் போத்தல்களுடனேயே அவர்கள் நேற்றுத் தமது வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தனர். இது தொடர்பில் வியாபாரிகள் தெரிவித்ததாவது:-

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையின் இடஅமைவு தொடர்பில் நீண்டகாலமாக இழுபறி நிலை நீடித்து வருகின்றது. பருத்தித்துறை நகரசபையின் தவிசாளருக்கும், செயலாளருக்கும் இடையில் நிலவிவரும் இந்த அதிகாரப் போட்டி காரணமாக, மரக்கறி வியாபாரிகளாகிய நாம் நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றோம்.

இதனாலேயே, நவீன சந்தையின் மேல்தளத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதென நாங்கள் தீர்மானித்துள்ளோம். ஆனால், நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் இருந்து வலுக்கட்டாயமாக வியாபாரிகள் வெளியேற்றப்படும் சூழ்நிலை காணப்படுகிறது. அவ்வாறு வியாபாரிகளை வெளியேற்ற முற்பட்டால், அதனால் ஏற்படும் பாதிப்பு பெரியதாக இருக்கும். தீக்குளித்து உயிர்மாய்ப்பதற்கும் வியாபாரிகள் தயாராகவே உள்ளனர். இதனால்தான், மண்ணெண்ணெய் போத்தல்களுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது எமது வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே, இனியும் இந்த விடயத்தில் எவரையும் தீர்மானம் எடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. பருத்தித்துறை நவீன சந்தையின் மேல்தளத்திலேயே இனி வியாபார நடவடிக்கைகள் இடம்பெறும். அதில் மாற்றமில்லை - என்றனர். (அ-ம-100)

## போதைக்...

சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் 6 பேரிடமும் இருந்து முறையே, ஒரு கிலோ 50 கிராம் கஞ்சா மற்றும் 10 கிராம் ஐஸ், 9 கிராம் ஐஸ், 4 கிராம் கஞ்சா, கஞ்சா பீடிகள் மற்றும் ஒரு கிராம் 30 மில்லிகிராம் ஐஸ் என்பன மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

## அரசாங்கத்தை...

உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டு எதிரணி என்று கூறிக்கொள்ளும் தரப்பினர்கள் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 21ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். ஆனால், அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவருமோ என்ற அச்சம் அவர்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கான முதலாவது வேட்டு நுகேகொடவில் வைக்கப்படும் என்று எதிரணியினர் முன்னர் கூறினார்கள். ஆனால், உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தை நினைவுபடுத்தவே இந்தப் பேரணி என்று இன்று கூறுகின்றனர்.

அரசாங்கம் என்ன செய்கின்றது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரமே நாம் செயற்படுகின்றோம். மக்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும். நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்ற தரப்பினரே இன்று பொருளாதாரம் பற்றி கேள்வி எழுப்புகின்றனர் - என்றார். (அ-ம-44)

## இரண்டாம்...

வாக்குகளும் அளிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சி நடுநிலை வகித்தது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. நவம்பர் 8ஆம் திகதி முதல் நேற்றுவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது. விவாதத்தின் பின்னர் நேற்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன ஆதரவாக வாக்களித்தன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சிலிண்டர் கூட்டணி, சர்வஜன அதிகாரம் என்பன எதிராக வாக்களித்தன. அர்ச்சுனா எம்.பி.யும் எதிராக வாக்களித்தார்.

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான தமிழரசுக் கட்சி வாக்களிப்பிலிருந்து விலகியது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், தொழிலாளர் கட்சி எம்.பி. காதர் மஸ்தான் உட்பட 14 எம்.பிக்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் இன்று ஆரம்பமாகும். டிசம்பர் 5 ஆம் திகதி இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் தேவை

- "ஜெயம் றியல் எஸ்டேட்" நிறுவனத்திற்கு உடனடியாக காணிகள் தேவை.
- கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, ராசபாதை வீதி, நிலாவரை, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், ஊரெழு, மானிப்பாய், தெல்லிப்பளை போன்ற இடங்களில் 2 பரப்புக்கு மேற்பட்ட காணிகளும், அத்துடன் அமைந்த வீடுகளும் விற்பனைக்கு இருந்தால் உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
- ஆவணங்கள் அனைத்தும் சட்டத்தரணி மூலம் சரி பார்க்கப்பட்ட பின்னர் விலை கொடுத்து வாங்கப்படும்.
- தரகு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ, சமூக வலைத் தளங்கள் மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ தொடர்பு கொள்ள வேண்டாம்.
- "ஜெயம் றியல் எஸ்டேட்" நிறுவனம் காணிகள், வீடுகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஆகும். எனவே காணிகள், வீடுகள் விற்பனைக்கு இருப்பின் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

**ஜெயம்**

சதீஸ் - 077 986 5457

ஜெயம் - 077 805 1655




## 'எழில்மிகு குருநகர்' செயற்றிட்டம் ஆரம்பம்

'எழில்மிகு குருநகர்' எனும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக ஐந்து மாடிக் கடற்கரை தொடங்கி அலுப்பாந்தீவு வரையான கடலில் கொட்டப்படுகின்ற கழிவுகளைச் சுத்தப்படுத்தும் பணிகள் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன. இந்தப் பணியை குருநகர் சுகாதார மேம்பாட்டு அமையமும் சுகாதார ஆர்வலர்களும் இணைந்து குருநகர் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் மேற்கொள்கின்றனர். (ச-41)

## ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்

கொழும்பு, காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் இந்த வார தொடக்கத்தில் இரு பெண் குழந்தைகள் ஒட்டிய நிலையில் பிறந்துள்ளன. மருத்துவமனைப் பணிப்பாளர் இதுதொடர்பில் தெரிவிக்கையில்,

பன்னாலாவைச் சேர்ந்த 29 வயதுடைய தாயார், சிசேரியன் மூலம் இந்த இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். பிறந்த ஒவ்வொரு குழந்தையும் தலா 2.2 கிலோகிராம் எடை கொண்ட நிலையில் ஆரோக்கியத்துடன் பிறந்துள்ளது. இரட்டைக் குழந்தைகளும் அவற்றின் வயிற்றுப் பகுதியால் இணைக்கப்பட்டுள்ளனர், மூன்று மாதங்களில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் பிரிப்பு சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது. அண்மைய வரலாற்றில் கொழும்பு, காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட முதல் ஒட்டிப் பிறந்த இரட்டையர் பிறப்பு இதுவாகும் - என்றார். (ச-இ)


**காணி உடன் விற்பனைக்கு உண்டு**

பலாலி வீதியுடன் கோண்டாவில் டிப்போக்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்பு காணி சிறு துண்டுகளாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 075 945 3391

(CS/30714) J-1


## பதினேழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 05 . 03 . 1932

மறைவு 24 . 10 . 2008



மீசாலை

## அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

B.A, Dip in Edu., M.A

(இளைப்பாறிய கொத்தணி அதிபர் )

திதி: அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பதினேழாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாட்கள் நடந்தபடி கடந்துமிங்கு – உம்நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

குடும்பத்தினர்,

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.


72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி

(CS/30712) J-1

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 16 . 11 . 1947

மறைவு 15 . 10 . 2025



கடந்த 15.10.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

## சுப்பிரமணியம் தங்கராஜா

(உரிமையாளர் - ராஜ் ஜுவல்லர்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (15.11.2025) நண்பகல் 12.00 மணியளவில் இல 37 சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்திலும் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவினால் துயருற்று இக்கட்டான சூழ்நிலையில் இருந்தமையினால் தங்களுக்கு இல்லங்களில் வந்து அழைக்க முடியாமையையிட்டு வருந்துவதோடு எமது இவ் அழைப்பை தங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

64/7 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 900 6957
077 663 6384

(CS 59881) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org